# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/36 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/36 ம் இலக்கம் —1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. அ. எண்: டபிளியு. 68(70)/76.*

**(நாற்பதாம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

*பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**வி. கொப்பல்லவ,**
**சனாதிபதி.**

**சனாதிபதியின் அலுவலகம்,**
**கொழும்பு,**
**1976 திசெம்பர் 17 ஆந் தேதி.**

**ஒழுங்குவிதிகள்**

**1.** இவ்வொழுங்குவிதிகள், அவசரகால (புடவை உற்பத்தித் தொழில் வேலையாட்களின் குறைந்தபட்ச மாதாந்தக் கூலி வீதங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2.** (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி தமக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது தம்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பணியை அல்லது கடமையை தொழிற்றிணைக்களத்து அலுவலர் எவர்க்கும் கையளிக்கலாம்.

**3.** இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது வாய்மொழியான அல்லது எழுத்துமொழியிலான அல்லது வெளிப்படையான அல்லது உட்கிடையான தொழில் ஒப்பந்தத்தில் எது எப்படியிருப்பினும், பயனும் வலுவுமுடையனவாதல் வேண்டும்; அதற்கிணங்க, அத்தகைய ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் அல்லது அத்தகைய ஒப்பந்தத்துக்குமிடையில் ஏதேனும் முரண் அல்லது ஒவ்வாமை காணப்பட்டு, அத்தகைய ஏற்பாடுகள் அத்தகைய முரணின் அல்லது ஒவ்வாமையின் அளவுக்கு அத்தகைய ஏதேனும் சட்டத்தின் மீது அல்லது ஒப்பந்தத்தின் மீது மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**4.** நூறு வேலையாட்களுக்கு மேற்பட்டோரை வேலைக்கமர்த்தும் புடவை உற்பத்தித் தொழிலின் தொழில் தருநர் ஒவ்வொருவரும் 1973 திசம்பர் 1 ஆம் தேதி தொடக்கம், நுட்பமிலா வேலையாள் ஒவ்வொருவருக்கும், 180 ரூபாவுக்குக் குறையாத ஒரு குறைந்தபட்ச மாதக் கூலியை, அவ்வேலையாள் அம்மாதத்தில் ஆகக் குறைந்தது இருபத்தைந்து நாட்களுக்காகுதல் வேலை செய்திருப்பின், கொடுத்தல் வேண்டும்.

**5.** நான்காம் ஒழுங்குவிதியில் எடுத்துரைக்கப்பட்ட மாதவீதக் கூலியானது, 1968 இன் 40 ஆம் இலக்க ஊழியரின் இடைக்கால நாணய மதிப்பிறக்கப்படிச் சட்டத்தின் கீழ்க் கொடுபடற்பாலதான இடைக்கால நாணய மதிப்பிறக்கப்படியையும் உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும்; ஆனால் அவசரகால (தனியார்துறை) சிறப்புப்படி ஒழுங்குவிதிகளின் கீழ்க் கொடுபடற்பாலதான தனியார்துறை சிறப்புப்படியை உள்ளடக்காது.

**6.** புடவை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள நுட்பமிலா வேலையாள் ஒருவருக்கு இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் குறைந்தபட்ச மாத வீதக்கூலி கொடுத்தலானது, கூலிச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அந்தத் தொழிலுக்கெனக் கூலிச்சபையினால் செய்யப்பட்ட ஒரு முடிவாக எல்லா நோக்கங்களுக்கும் கருதப்படல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க அந்தக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவை கூலிச்சபையின் வேறேதேனும் முடிவுக்கு ஏற்புடையனவாகின்ற அதே முறையில் அத்தகைய கொடுப்பனவுக்கும் கொடுப்பனவு தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

7. 1973 திசம்பர் 1 ஆம் தேதிக்கு நேர்முந்திய நாளில் புடவை உற்பத்தித் தொழிலில் உள்ள எவரேனும் தொழில்தருநரால் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் நுட்பமிலா வேலையாள் ஒவ்வொருவரும், அத்தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருக்கின்ற காலம் வரைக்கும், 1973 திசெம்பர் 1 ஆம் தேதிக்கு நேர்முந்திய நாளில் அத்தகைய வேலையாள், எத்தகைய சம்பளம், படி., அல்லது வேறு காசுக் கொடுப்பனவுகள் பற்றிய (அவை என்ன பெயரோ குறிப்புப் பெயரோ கொண்டு அழைக்கப்படினுஞ்சரி) நியதி நிபந்தனைகளை அநுபவித்தாரோ அத்தகைய வற்றிலும் பார்க்க வாய்ப்புக் குறைந்தனவான அத்தகைய நிபந்தனைகளில் அத்தகைய தொழில்தருநரால் தொடர்ந்தும் அவ்வாறே வேலைக்கமர்த்தப்பட்டிருந்து வருதல் வேண்டும்.

8. இந்த ஒழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

(அ) " ஆணையாளர் ", " வேலையாளர் ", " தொழில்தருநர் ", " கூலிகள் ", " தொழில் " என்பன 136 ஆம் அத்தியாயமான கூலிச்சபைகள் கட்டளைச்சட்டத்தில் அவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதே கருத்தையே உடையன.

(ஆ) " புடவை உற்பத்தித் தொழில் " என்பது, அந்தத் தொழில் தொடர்பில் 136 ஆம் அத்தியாயமான கூலிச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ்த் தொழில் ஆணையாளரால் ஆக்கப்பட்டு, 1967 ஓகத்து 25 இன் 14,763 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப்பட்டுப பின்னர் 1973 மாச்சு 30 இன் 53 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் திருத்தப்பட்ட கட்டளையில் உள்ள அதே பொருளையே கொண்டிருக்கும்.

(இ) " நுட்பமிலா வேலையாளர் " என்பது, புடவை உற்பத்தித் தொழிலுக்கெனக் கூலிச்சபையினால் தீர்மானிக்கப்பட்டு 1971 எப்பிரில் 19 இன் 14,955 ஆம் இலக்க அதிவிசேட கசற்றில் வெளியிடப்பட்ட முடிவில் உள்ள அதே பொருளையே கொண்டிருக்கும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/37 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/37 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

*பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதல் அமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதி யினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வி. கொபல்லவ,
*சனாதிபதி.*

*சனாதிபதியின் அலுவலகம்,*
கொழும்பு,
1976, திசெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள், அவசரகால (தனியார்துறை) சிறப்புப் படி பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (i) இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்கு, ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும்.

(ii) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இந்த ஒழுங்குவிதிகளால் வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவம், பணி அல்லது கடமை எதனையும் அத்தகைய அதிகாரி தொழிற்றிணைக்களத்தின் அலுவலர் எவருக்கும் கையளிக்கலாம்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளானவை, எழுத்திலுள்ள வேறேதேனும் சட்டத்தில் அல்லது வேலைக் கமர்த்துதல் தொடர்பிலான வாய் மொழி மூலமான, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஒப்பந்தத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், வலுவும் பயனுமுடையனவாதல் வேண்டும் : அதற்கிணங்க இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டம் அல்லது ஒப்பந்தத்துக்கும் இடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் நேருமிடத்து, அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தம் எதனையும்விட இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து நான்காம் ஆண்டு எப்பிறல் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர், தொழில் எதிலும் ஒரு மாதத்தில் எண்ணூறு ரூபாவுக்கு மேற்படாத மொத்த சம்பாத்தியமுடைய வேலையாள் ஒருவரைக் கொண்டுள்ள தொழில் தருநர் ஒவ்வொருவரும், 1974 எப்பிறில் மாதம் உட்பட ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய வேலையாளுக்கு, பின்வரும் அடிப்படையிற் கணிக்கப்படுவதான படியைக் கொடுத்தல் வேண்டும் ;—

(அ) அத்தகைய வேலையாளர், எழுத்திலுள்ள சட்டம் எதனாலும் ஒழுங்காக்கப்பட்ட வேதனத்தை அல்லது கூலியைப் பெறும் வேலையாளாயிருக்குமிடத்து, அவர் மாத வீதத்தில் ஊதியம் வழங்கப்படும் வேலையாளாயிருப்பின் அம்மாதத்தில் அத்தகைய வேலையாளுக்குரிய கூலியின் அல்லது வேதனத்தின் இருபது நூற்றுவீதத்திலும் குறையாததும், அவர் நாட்கணக்கு வீதத்தில் ஊதியம் வழங்கப்படும் வேலையாளாயிருப்பின், அம்மாதத்தில் அவர் வேலை செய்த ஒவ்வொரு நாளுக்கும் உரிய நாட்கூலியின் இருபது நூற்றுவீதத்திலும் குறையாததுமான ஒரு படி ;

ஆயின், எவ்வாறுயினும், இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் கொடுக்கற்பாலதான பணத்தொகை மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாவுக்கு மேற்படலாகாது :